இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும்! கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் வடிவை ஏற்று, மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து, தம்மையே தாழ்த்திக்கொண்டார். எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார். (பிலி 2:5-9)



# சுற்றுச்சூழல் பாவங்களுக்காக மனம் வருந்துவோம்

## திருத்தந்தை வலியுறுத்து

**வத்திக்கான்:** கடவுளின் அருள் உதவியுடன் சுற்றுச்சூழலுக்கு எதிரான நமது பாவங்களுக்காக மனம் வருந்துவோம் என்று தனது டுவிட்டர் பக்கத்தில் குறுஞ்செய்தி ஒன்றினைப் பதிவிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கடந்த செப்டம்பர் 16 சனிக்கிழமை 'ஹாஸ்டாக் படைப்பின் காலம்' என்ற தலைப்பில் தனது கருத்துக்களைப் பதிவிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கிறிஸ்தவ ஒன்றிப்பு முதுபெரும் தந்தையான பர்த்தலமேயு வலியுறுத்துவது போல சுற்றுச்சூழல் பாவங்களுக்காக மனம் வருந்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

கடவுளின் அருள் உதவியுடன் நமது வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ள முயற்சிக்க வேண்டும் என்றும் அக்குறுஞ் செய்தியில் வலியுறுத்தியுள்ளத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பொருள்களை வீணாக்குதலில் கவனம், தேவையற்ற நுகர்வு கலாச்சாரம் ஆகியவற்றில் விழிப்புணர்வு கொண்ட வாழ்க்கை முறையை நாம் பின்பற்ற வேண்டும் என்றும் எடுத்துரைத் துள்ளார்.

மேலும், அணுஆயுதங்கள் முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டும் எனவும், ஏனைய ஆயுதங்கள் கூட தற்காப்புக்காக அன்றி வேறு எச்சூழலிலும் பயன்படுத்தப்படக்கூடாது எனவும் அனைவரையும் விண்ணப்பித்துள் ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

திருத்தந்தை 23ஆம் ஜான் அவர்களின் "Pacem in Terris", அதாவது, அவனியில் அமைதி என்ற சுற்றுமடல் வெளியிடப்பட்டதன் 60ஆம் ஆண்டு




நிறைவையொட்டி இடம்பெறும் வத்திக்கான் கருத்தரங்கில் பங்குபெறுவோருக்கு அனுப் பியுள்ளச் செய்தியில் இவ்வாறு குறிப்பிட் டுள்ளார் திருத்தந்தை.

நார்வே நாட்டுத் தலைநகர் ஓஸ்லோ விலுள்ள அமைதி ஆய்வு நிறுவனத்துடன் இணைந்து வத்திக்கானின் சமூக அறிவியல் கழகம் ஏற்பாடுச் செய்துள்ள கருத் தரங்கிற்கென அக்கழகத்தின் தலைவர் கர்தினால் பீட்டர் டர்க்சன் அவர்களுக்கு திருத்தந்தை அனுப்பியுள்ளச் செய்தியில், பல்வேறு கூறுகளாக இன்றைய உலகில் இடம்பெற்று வரும் மூன்றாம் உலகப்போர், உக்ரைனின் துயரம் தரும் மோதல்கள், மற்றும் அணு ஆயுதம் பயன்படுத்தப்படுமோ என்ற அச்சம் போன்றவைகளின் மத்தியில் இக்கருத்தரங்கு ஏற்பாடுச் செய்யப்பட் டுள்ளதைக் குறிப்பிட்டுள்ளார்.

1962ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் உலகை அணு ஆயுத பயன்பாட்டின் விளிம்புவரை இட்டுச் சென்ற கியூப ஏவுகணை நெருக்கடியைத் தொடர்ந்து திருத்தந்தையின் Pacem in Terris ஏடு வெளியிடப்பட்டது என தன் செய்தியில் கூறியுள்ள திருத்தந்தை, இன்றைய பதட்ட நிலைகளையும் அதனோடு ஒப்பிட்டுக் காட்டியுள்ளார்.

அமைதிக்கு இராணுவ மற்றும் தொழில்நுட்ப அடிப்படையிலான அச்சுறுத்தல்கள், அணு ஆயுதங்கள் தொடர்ந்து வைக்கப்படிருப்பது குறித்த ஒழுக்க ரீதி கேள்விகள், ஆயுத ஒழிப்பு முயற்சிகளை புதுப்பித்தல், அமைதியைக் கட்டியெழுப்பும் முயற்சிகளில் முன்னேற்றம் போன்றவை குறித்து, இக்கருத்தரங்கில் பங்குபெறுவோர் விவா திக்க வேண்டும் என அழைப்புவிடுத்துள்ள திருத்தந்தை, அணுசக்தியை போருக்கெனெ பயன்படுத்துவதும், அணு ஆயுதங்களைக் கொண்டிருப்பதும் நன்னெறிக் கொள் கைக்கு எதிரானவை எனவும் அதில் குறிப்பிட்டுள்ளார்.

*கிறிஸ்டோபர் பிரான்சிஸ் – வத்திக்கான்*

# ஈப்போ, புனித லூர்து அன்னை பங்கில் புகழ் ஆராதனை கண்விழிப்பு கொண்டாட்டம் நடைபெற்றது

**ஈப்போ:** கடந்த ஆகஸ்டு திங்கள் 30 & 31 ஆகிய நாள்களில் இங்கு, சிலிபின் சாலையில் அமைந்துள்ள புனித லூர்து அன்னை பங்கில் புகழ் ஆராதனை கண்விழிப்பு இறைவேண்டல் நடைபெற்றது. இந்நிகழ்வு, ஆன்மீக ரீதியில் எழுச்சியூட்டக் கூடியதாகவும் அர்த்தமுள்ளதாகவும் அமைந்தது. **'வார்த்தையினால் விடுதலை'** என்ற கருப்பொருளை மையமாகக் கொண்ட இந்த ஆராதனை மக்கள் ஒன்றுக்கூடி இறைவனைப் போற்றவும் ஆராதிக்கவும் சிறந்த வாய்ப்பாக இருந்தது என பலராலும் பகிரப்பட்டது.

புனித லூர்து அன்னை தேவாலயப் பங்கு மக்களோடு சுற்றுவட்டார பங்கு மக்களாக ஏறக்குறைய 180 பேர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். உற்சாகமான 8 மணி நேர இடைவிடா இறைவேண்டலே இந்நிகழ்வின் தனிச்சிறப்பு எனலாம்.

புனித லூர்து அன்னை பங்கின் பல்வேறு செபக்குழுக்களின் தீவிர ஈடுபாடு இந்நிகழ் வின் பக்தி மற்றும் விசுவாசத்திற்கு ஆணிவேராக அமைந்தது.





- அருங்கொடை குழுவினர் : இவர்கள் இச்செபத்தை உற்சாகமாக வழிநடத்தி தங்கள் இசைக்கலைஞர்களால் விசுவாசிகளைத் தெய்வீகச் சூழலில் அமர்த்தி நிகழ்வை வெற்றிக்கரமாக நடத்தினர்.
- ஜெபமாலை நவநாள் குழுவினர் : விசுவாசிகள் ஒன்றிணைந்து ஜெபமாலை ஜெபித்து ஆழ்ந்த பக்தி உணர்வில் இறைவனோடு ஒன்றித்திருக்கச் செய்தனர்.
- பரிந்துரைக் குழுவினர் : நாடு, சமூகம் மற்றும் அப்பாற்பட்ட தேவைகளை இறைவனிடம் உயர்த்தி தீவிரமாக மன்றாட வழிவகுத்தனர்.
- எழுப்புதல் குழுவினர் : இருதய ஆண்டவர் செபத்தின் வழியாக அவரின் இருதயத்திலிருந்து பொழியும் அன்பையும் இரக்கத்தையும் பெற மன்றாடினர்.
- இரக்கத்தின் ஆண்டவர் செபக்குழுவினர் : இறைவன் தன் எல்லையற்ற இரக்கம் மற்றும் மன்னிப்பை வழங்க திருவுளமானார் என்ற செய்தியைத் தியானித்தனர்.

*தொடர்ச்சி, அடுத்தப் பக்கம்*

# ஒரே திருஅவையாக ஒன்றித்து கர்தினாலாகத் தேர்வுப்பெற்ற ஆயரின் கார்தினல் திருநிலைப்பாட்டு நிகழ்வைக் கொண்டாடுவோம்

பினாங்கு: கடந்த 9 ஜூலை அன்று அதிகாரப்பூர்வமாக ‘கர்தினாலாகத் தேர்வுப் பெற்ற’ பினாங்கு மறைமாவட்டத் தின் ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்களை நேற்று செப்டம்பர் 30 ஆம் திகதி, வத்திக்கான புனித பேதுரு பேராலயத்தில் அதிகாரப்பர்வ சடங்கில் ‘கர்தினலாக’ திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நியமித்தார்.

மலேசிய திருஅவைக்குக் கிடைத்த அங்கீ காரமாகவே இந்த நியமனம் பலராலும் கருதப்படுகிறது.

அகில உலக திருஅவையோடு இணைந்து நாமும் கர்தினால் அவர்களை வாழ்த்து வோம். வரவேற்போம்.



இறைபணி பொதுப்பணி என
இரு பணியும் ஒருசேர

ஆண்டுகள் நாற்பத்தாறு இடர்பல
எதிர்த்து உழைத்து

நாங்கள் சொல்லில் போற்றும்
செழுங்காவியமாய் இன்று

கர்தினாலாக அழைப்பை ஏற்ற
தவப்புதல்வா வாழ்க!

மலர்மாலை சூடினால் மாலையில்
வாடும் என்றெண்ணி

மலேசியர் மனமதில் பூத்தமகிழ்வாம்
வாடா மலர் தூவி

மண்ணில் விண்ணின் தண்நிலவென
புகழொளி வீசி

எண்ணிலா காலம் இப்பணி
செய்துவாழ வாழ்த்துவமே!

*-இறைத்தூதன்-தெ ஹெரால்டு*

முதல் பக்கத் தொடர்ச்சி.

இந்நிகழ்வின் உச்சமாக அமைய, விவிலிய வினாடி வினா நிகழ்ச்சி துணைப் புரிந்தது. மேலும் மறைத்தந்தை சைமன் ஆனந்த் அவர்களின் ஒரு மணி நேர இறைவார்த்தைப் பகிர்வு இந்நிகழ்வின் நாடித் துடிப்பாக அமைந்தது.

இளைஞர்களின் அர்ப்பணிப்பும், இசை மீட்டிய சகோதரர் டேனியல் அம்புரோஸ் ஜோர்ஜ் மற்றும் சகோதரி ரெபேக்கா மார்ட்டின் மற்றும் பாடல்களை வழிநடத் தியதும் ஆராதனை வழிபாட்டை தொய்வின்றி கொண்டு செல்லவும் தெய்வீக நிலையில் அமர்த்தவும் உறுதுணையாக இருந்தது.

நிகழ்வின் அடுத்ததாக இடைவிடா ஒரு மணி நேரப் புகழ் ஆராதனை அமைந்தது. பங்கேற்பாளர்கள் தூய ஆவியால் சூழப் பட்டனர்.

ஆகஸ்டு 31 அன்று, அதிகாலை 3 மணிக்குத் திருப்பலியோடு நற்கருணை ஆசிர்வாதம் வழங்கப்பட்டது. திருப்பலி பங்கின் திருத் தொண்டர்கள் சந்தனசாமி மற்றும் ஜோர்ஜ் வைத்தியநாதன் அவர்களின் உடனிருப் புடன் மறைத்தந்தை சைமன் ஆனந்த் அவர்களால் நிறைவேற்றப்பட்டது.

இந்நிகழ்வு வெற்றிக்கரமாக நடைபெற மூலக்காரணமாக விளங்கிய பங்குத் தந்தை ரோபர்ட் டேனியல் அவர்களின் அளவில்லா ஆதரவுக்கும் வழிக்காட்டுதலுக்கும் பாராட்டுதலும் நன்றியும் தெரிவிக்கபட்டது.

*-திருமதி கிறிஸ்தினா மார்ட்டின், ஈப்போ*

# புனித பாத்திமா அன்னை பங்கில் ‘கூட்டு ஒருங்கியக்கப் பயணம்’ ('சினடாலிட்டி') பயிலரங்கம் நடைபெற்றது

**கோலாலம்பூர்:** கடந்த 14 செப்டம்பர், வியாழக்கிழமையன்று, இங்கு, பிரிக்பீல்ஸ் பகுதியில் உள்ள புனித பாத்திமா பங்கில் ‘கூட்டொருங்கியக்கப் பயணம்’ (Synodality) எனும் தலைப்பில் பயிலரங்கம் ஒன்று நடைபெற்றது. இரவு 8 மணிக்குத் தொடங்கிய இப்பயிலரங்கத்தைப் பங்குத் தந்தை வில்லியம் மைக்கல் அவர்கள் இனிதே தொடக்கி வைத்தார்.

தமிழகத்தின் தூத்துக்குடி, புனித பனிமய அன்னை திருத்தலப் பேராலயத்தின பங்குத்தந்தை டாக்டர் குமார் ராஜா



*சொற்பொழிவாற்றும் அருள்தந்தை டாக்டர் குமார் ராஜா*

அவர்கள் இப்பயிலரங்கத்தை முழுமையாக வழிநடத்தினார். அவர் தொடக்கமாக, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் திருஅவைக்கான எதிர்ப்பார்ப்பை விவரித்தார். தாய் திருஅவை அனைவருக்கு மானது. அனைவரும் இதில் ‘சரிசமமாக மகிழ்ச்சியாக’ பயணிக்க வேண்டும் என்பதே திருத்தந்தையின் எதிர்ப்பார்ப்பு என்றார்.

இத்தகைய சரிநிகரான மகிழ்ச்சியை திருஅவை கொண்டிருக்க வேண்டு மானால், திருஅவை புத்தாக்கம் பெற்றிட மூன்று முத்தான விடயங்களான:

1. ஆழமான ஒன்றிப்பு
2. முழுமையான பங்கேற்பு
3. உலகில் மறைப்பணிக்கு முனைப்பு

ஆகியவற்றை நாம் அறிந்திட திருத்தந்தை அழைப்புத் தருகின்றார் என்று சொற் பொழிவைத் தொடங்கினார்.

அடுத்து, கூட்டொருங்கியக்கப் பயணத்தின் போது, உலகெங்கும் உள்ள திருஅவை பங்கு, மறைமாவட்டம் மற்றும் வட்டார அளவில் அனைத்து இறை மக்களும் கலந்துரையாடி திருஅவைக்கான எதிர்காலப் பயணத்தைத் தீர்மானிக்க உதவும் வகையில் முன்மொழியப்பட்டுள்ள ஆறு அம்சங்களையொட்டி ஒவ்வொன்றாக விளக்கினார். அவை: 1. இறைவேண்டல் செய்யும் திருஅவை 2. செவிமடுக்கும் திருஅவை. 3. ஆய்வு செய்யும் திருஅவை 4. உரை யாடும் திருஅவை 5. அறிவுரை கூறும் திருஅவை 6. தேர்ந்து தெளியும் திருஅவை ஆகியனவாகும்.

இடையிடையே, குடும்ப வாழ்வு. செப வாழ்வு ஆகியவற்றின் இன்றைய சூழ்நிலை யைப் பற்றியும் அவர் மேற்கோள்கள் காட்டி கருத்துரைத்தார்.

உலகலாவிய திருஅவையாக ஒன்றிணைந்து, குறிப்பாக ஒவ்வொரு மறைமாவட்ட அளவிலும் கூட்டொருங்கியக்க வாழ்வியல் அனுபவங் களை ஒருவர் மற்றவருக்கு பகிர்ந்திடவும், அத்தகைய கூட்டொருங்கியத் திருஅவைப் பயணம் மேலும் தொடர்ந்திட அனைவரின் கருத்துகளையும் கேட்டறியவும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நமக்கு



*பயிலரங்கத்தில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினர்*

அழைப்பினை விடுத்துள்ளார். இது தூய ஆவியாரின் காலத்திற்கு ஏற்ற அழைப்பு என்று கூறி தமது சொற்பொழிவை இனிதே முடித்தார்.

இறுதியாக பங்கின் திருத்தூர்பணிக்குழு தலைவி சகோ. ஸ்டெல்லா சந்தியாகு அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்வு ஒரு முடிவை எய்தியது.

# நமது சொல்லும் செயலும் ஒன்றித்திருக்கட்டும்

இன்று ஆண்டின் பொதுக்காலத்தின் 26-ம் ஞாயிறு. இன்றைய முதல் வாசகத்தில் இஸ்ரயேல் மக்கள் "கடவுளின் வழி செம்மையானதாக இல்லை" என்று கடவுளையே குற்றம் சாட்டுகிறார்கள். அதற்குக் கடவுள் இறைவாக்கினர் எசேக்கியேல் வழியாக, "இஸ்ரயேல் வீட்டாரே! கேளுங்கள். என் வழியா நேர்மையற்றது?" என்று கேள்வி கேட்டு, அவர்களை மனம்மாறி நல்வாழ்வு வாழ அழைக்கின்றார்.

பாவிகள் தங்களது பாவ வாழ்க்கையை விட்டுவிட்டு நல்வாழ்வு வாழ்ந்தால் வாழ்வடைவர். அவ்வாறு மனம் மாறாவிடில் அவர்கள் தம் தீய வழியிலேயே சாவார்கள் என்றும் எச்சரிக்கின்றார். மனம்மாறும் பாவிகளுக்கும், நல்வாழ்வு வாழ்வோருக்கும் வாழ்வளிக்கும் இரக்கமிகுந்த தந்தையாக கடவுள் இருக்கின்றார். அவர் ஒருபோதும் வேற்றுமை பாராத கடவுள். எல்லாரும் கடவுளின் வழிமுறைகளை அறிந்து, அவற்றிற்கு கீழ்ப்படிந்து நல்வழியில் வாழவேண்டும் என்றே அழைக்கின்றார்.
இன்றைய நற்செய்தியில், மற்றுமொரு உவமையின் வழியாக இயேசு நம்மிடம் பேசுகிறார். தந்தை ஒருவருக்கு இரு மகன்கள் இருந்தனர். அவர் தனது மகன்களிடம், "நீ இன்று திராட்சை தோட்டத்திற்குச் சென்று வேலை செய்" என்று கட்டளையிடுகின்றார். இரு மகன்களுக்கும் ஒரே கட்டளை. இதன் வழியாக தந்தை எந்த பிள்ளைக்கும் வேற்றுமை பார்ப்பதில்லை என்று இயேசு தெளிவுபடுத்துகின்றார்.

ஆனால், இருவிதமான பதில்மொழியை நாம் பார்க்கின்றோம். அதாவது, மூத்த மகன் தான் போகவிரும்பவில்லை என்று சொன்னாலும், பிறகு தனது எண்ணத்தை மாற்றிக்கொண்டு தந்தையின் கட்டளைக் குக் கீழ்படிகின்றார். ஆனால், இளைய வனோ, தான் போகிறேன் என்று சொல்லிவிட்டு பிறகு கீழ்படிய மறுக்கின் றான். தனது இரு மகன்களிடமிருந்து தந்தை உண்மையான கீழ்படிகின்ற மனநிலையை எதிர்பார்க்கின்றார்.
இன்றைய இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் நம் ஆண்டவர் இயேசுவின் கீழ்படிதலை நம் அனைவருக்கும் முன்மாதிரியாகக் காட்டுகின்றார். இயேசு கிறிஸ்து கொண்டிருந்த மனநிலை தந்தையின் திருவுளத்திற்குக் கீழ்படிகின்ற மனநிலையாகும். "கிறிஸ்து சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்படிந்தார்" (பிலி 2:8). தமது கீழ்படிதலால் தந்தையாம் கடவுளை அவர் மாட்சிப்படுத்தினார். ஆகவே, தம்மை தாழ்த்திக்கொண்ட கிறிஸ்துவை கடவுள் அனைவருக்கும் மேலாக உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை வழங்கி மாட்சிப்படுத்துகின்றார்.
நாமும் சில தருணங்களில் கடவுளையும், பிறரையும் குறைகூறி வாழ்கின்றோம். கட்சி மனபாண்மைக்கும் வீண் பெருமைக்கும் இடம் தந்து வாழ்கின்றோம். ஆனால், கடவுளின் திருவுளத்தை அறிந்து அவற்றிற்கு கீழ்படிந்து வாழ்ந்தால் நம்மையும் கடவுள் உயர்த்துவார்.

கிறிஸ்துவிடமிருந்த மனநிலை இன்று நம்மிலும் உருவாக நம்மில் தாழ்ச்சி மேலொங்கட்டும்.

*கிரேஸ் ஜோசப், பெஸ்தாரி ஜெயா*

**ஆண்டின் பொதுக்காலம் 26ம்- ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | எசே 18:25-28 |
| தி.பாடல் | 25:4-5, 6-7,8-9 |
| 2-ம் வாசகம் | பிலி 2:1-11 |
| நற்செய்தி | மத் 21:28-32 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை- வாரம் 1**